# விநாயகர் சதுர்த்தி! - *10-09-2021*

இருந்தது இருந்தபடி இயன்நிலை வாழ்வுதன்னில்,
பொருந்துமோர்ப் பெருநிதியாய்ப் பரம்பொருளை
கருத்தூன்றித் தொழுதற்கு எழுந்தப் பெருநிதியாம்,
மருவில்லாப் பிள்ளையெனப் பிள்ளையார் அவன்

உருவில்லா ஒருபொருளாய் உள்ளத்தில் ஏற்றிட
உருவாவான், சாணம், மண் மஞ்சள் எனவாய்!
கருவாவான் ஓலைப் பதம்சொல்லும் சுழியாய்!
பருவத்தின் மாற்றமென தொந்தி கணபதியும்,

உருவம்தனைக் கொண்டு பிள்ளையானான்!
மருகன் மாலனுக்காய், ஈசன் மகனுமானான்!
கருவாய் மனம் தேற புத்தனின் வழி யமர்ந்தான்!
திருவாய் அவன் நிலையும் அரசமரம் ஆனதன்றோ!

அருளாய் மனமாய் ஆனந்த வடிவாய் நாளும்
கருவாய் மனத்துள் ஏற்றும் அன்பின் வடிவே!
தருவாய் வாழ்வின் தடங்களில் நிறைந்து,
அருள்வாய் தொந்திக்கணபதியே பிள்ளையாரே!

- **கவிவளவன்** 09-09-2021